சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 06.07.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இ.கா.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். SA 9322/E/2024**

திருமதி.D.INDIRA .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், மாதவரம்
வட்டம், சென்னை மாவட்டம் - 600 007. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (06.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திருமதி,D.INDIRA அவர்கள் இன்றைய விசாரணையில் ஆஜராகவில்லை. |
| தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 7(2)-ன்படி மேல்முறையீட்டாளர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது | |
| பொது அதிகார அமைப்பின் சார்பாக | திருமதி.B.M.எல்லுசா, தலைமையிடத்து துணை வட்டாட்சியர், மாதவரம் வட்டம், சென்னை அவர்கள் ஆஜரானார். |
| சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் மனு நாள் | 20.04.2024 |
| **கோரிய தகவல்**, Kindly provide total land area of mother doc no.1448/1943, copy of partition deed/ settlement / will which were submitted during the sub-division of patta no.209, survey no.208/1 doc. No.1448/1943 உள்ளிட்ட 13 இனங்களில் தகவல்களை வழங்கக் கோரி, பொதுத் தகவல் | |

<table>
<tr><td colspan="2">அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், மாதவரம் வட்டம், சென்னை அவர்களுக்கு மனு செய்துள்ளார். மனுவானது சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ், முதல் மேல்முறையீட்டு அலுவலர், வட்டாட்சியர், மாதவரம் அவர்களின் 11.06.2024 தேதியிட்ட கடிதம் வாயிலாக பொதுத் தகவல் அலுவலர், தனி வட்டாட்சியர், நகர நிலவரித் திட்டம், மாதவரம் அவர்களுக்கு மாற்றப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>பொதுத் தகவல் அலுவலர் பதில் கடிதம்</td><td>---</td></tr>
<tr><td>சட்டப் பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனு நாள்</td><td>22.05.2024</td></tr>
<tr><td>மேல்முறையீட்டு அலுவலர் பதில் கடிதம்</td><td>---</td></tr>
<tr><td>சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள்</td><td>08.07.2024</td></tr>
</table>

•••••

- பொதுத் தகவல் அலுவலர், இவ்வழக்கில் மனுதாரர் கோரிய தகவல் தங்கள் அலுவலக கடித Rc.No.2025/A2/2026, Dated 01.07.2026 தேதியிட்ட கடிதம் வாயிலாக மனுதாரருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாக எடுத்துரைக்கிறார்.
- பொதுத் தகவல் அலுவலரின் வாதத்தின் மீதான எதிர் வாதத்தினை எடுத்துரைக்க மனுதாரர் இன்றைய விசாரணையில் ஆஜராகவில்லை.

2. பொதுத் தகவல் அலுவலரின் வாதம் மற்றும் ஆவணங்களை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு கீழ்கண்டவாறு உத்தரவிடப்படுகிறது:-

a) இவ்வழக்கில் மனுதாரர் 20.04.2024 தேதியிட்டு சட்டப் பிரிவு 6(1)-ன்கீழ் கோரிய தகவல்களுக்கு தற்போதைய பொதுத் தகவல் அலுவலரால் **01.07.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு முதன் முதலாக தகவல் வழங்கப்பட்டுள்ளதை ஆணையம் பதிவு செய்கிறது**.

b) மேலும், மனுதாரர் 20.04.2024 தேதியிட்ட சட்டப் பிரிவு 6(1) மனுவினை பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், மாதவரம் அவர்களுக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவினை பெற்றுக்கொண்டு, மேற்படி மனுவானது முதல் மேல்முறையீட்டு அலுவலர் மற்றும் வட்டாட்சியர், மாதவரம் அவர்களால் 11.06.2024 தேதியிட்டு, பொதுத் தகவல் அலுவலர் மற்றும் தனி வட்டாட்சியர், நகர நிலவரி திட்டம், மாதரவரம் வட்டம் அவர்களுக்கு மாற்றப்பட்டுள்ளது.

c) **எனவே முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர், மாதவரம் அவர்களுக்கு கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது**:-

i. மேற்படி 20.04.2024 தேதியிட்ட சட்டப் பிரிவு 6(1) மனுவினை பெற்றுக்கொண்டு வரையறுக்கப்பட்ட 5 தினங்களுக்குள் சட்டப்

பிரிவு 6(3)-ன்கீழ் மனுவினை தொடர்புடைய பொதுத் தகவல் அலுவலர்/ பொது அதிகார அமைப்பிற்கு மாற்றத் தவறிய பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர் யார் என கண்டறிந்து, அவர் மீது சட்டப் பிரிவு 20(1)-ன்கீழ் பணத்தண்டமும், 20(2)-ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்துப்பூர்வமான விளக்கத்தினையும்,

ii. மேற்படி மனுவினை பெற்றுக்கொண்டு, வரையறுக்கப்பட்ட 30 தினங்களுக்குள் தகவல் வழங்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் யார் என கண்டறிந்து, அவர் மீதும் சட்டப் பிரிவு 20(1)-ன்கீழ் பணத்தண்டமும், 20(2)-ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்துப்பூர்வமான விளக்கத்தினையும்,

iii. மேலும், 22.05.2024 தேதியிட்டு மனுதாரர் சட்டப் பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை, முதல் மேல்முறையீட்டு அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், மாதவரம் அவர்களுக்கு மனுசெய்துள்ளார். மேற்படி மனுவிற்கு தகவல் வழங்காத அப்போதைய முதல் மேல்முறையீட்டு அலுவலர் யார் என கண்டறிந்து, அவர் மீது சட்டப் பிரிவு 20(2)-ன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ள ஏன் பரிந்துரைக்கக் கூடாது என்பதற்கான எழுத்துப்பூர்வமான விளக்கத்தினையும், பெற்று, அதனை ஓர் அறிக்கையாக தயார் செய்து அவ்வறிக்கையினை இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக **இவ்வாணையத்தில் 04.08.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க தற்போதைய முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டாட்சியர், மாதவரம் அவர்களுக்கு உத்தரவிடப்படுகிறது**.

d) மேற்படி உத்தரவினை முழுமையான நிறைவேற்றி அதுகுறித்த அறிக்கையினை குறிப்பிட்ட தேதியில் இவ்வாணையத்தில் சமர்ப்பிக்க தவறும் பட்சத்தில், விளக்கம் அளிக்க ஏதும் இல்லை என ஆணையத்தால் கருதப்பட்டு சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 9322/E/2024</u>**

**<u>பெறுநர்</u>**

முதல் மேல்முறையீட்டு அலுவலர்/
வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மாதவரம் வட்டம், சென்னை மாவட்டம்-66.

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத் துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மாதவரம் வட்டம், சென்னை மாவட்டம்-66.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திருமதி,D.INDIRA,
No.34/45, Perumal Koil Street,
Alapakkam, Porur, Chennai - 600 116.

Copy to: File MP/PA-